ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

मातर्जाह्नवि शम्भुसङ्गवलिते मौलौ निधायाञ्जलिं
त्वत्तीरे वपुषोऽवसानसमये नारायणाङ्घ्रिद्वयम् ।
सानन्दं स्मरतो भविष्यति मम प्राणप्रयाणोत्सवे
भूयाद्भक्तिरविच्युता हरिहराद्वैतात्मिका शाश्वती ॥ गङ्गाष्टके ॥

மாதர்ஜாஹ்நவி ஶம்புஸங்கவலிதே மௌலௌ நிதாயாஞ்ஜலிம்
த்வத்தீரே வபுஷோऽவஸாநஸமயே நாராயணாங்க்ரித்வயம் ।
ஸாநந்தம் ஸ்மரதோ பவிஷ்யதி மம ப்ராணப்ரயாணோத்ஸவே
பூயாத்பக்திரவிச்யுதா ஹரிஹராத்வைதாத்மிகா ஶாஶ்வதீ ॥
கங்காஷ்டகே ॥

ஒரு பெரியார் உலகிலுள்ள தாய்மார்கள் தங்கள் தங்கள் குழவிகளை எங்ஙனம் பாதுகார்ப்பார்களோ அவ்விதம் ஸகலப் பிராணிகளையும் தன் குழந்தைகளாகப் பாவித்து இரக்ஷிப்பவளும் பரமேசுவரனுடைய ஸம்மந்தத்தால் மிகவும் பிரகாசிக்கிறவளுமான ஹே கங்காதேவி புனிதமான உனது தீரத்தையடைந்து இச்சரீரத்திற்கு முடிவேற்படுங்கால் சிரஸ்ஸில் அஞ்சலிபந்தம் செய்துகொண்டு ஸ்ரீநாராயணருடைய சரணங்களைஸ்மரித்துக்கொண்டு ஆனந்தமாயிருக்கும் எனக்கு சரீரத்திலிருந்து பிராணன் வெளியில் செல்லுகிறதான உத்ஸவ காலத்தில் ஹரி, ஹரர் என்கிற வேற்றுமையில்லாமல் ஒரேரூபமாயும் எப்பொழுதும் ஸ்திரமாயிருக்கும் சிறந்த பக்தியானது உன் அனுக்கிரகத்தால் ஏற்படவேண்டுமென்று வேண்டுகிறார்.

இதினால் கங்காதீரம் மிகவும் பரிசுத்தமானதென்றும் அங்கு வஸிப்பவர்களுக்குச் சித்தசுத்தி ஏற்பட்டு பகவத்பக்தியுண்டாகுமென்றும் அந்த பக்தியும் சிவன், விஷ்ணு என்கிற பேதபுத்தியையடைந்து யாராவதொருவருடைய அபராதத்திற்குள்ளாகாமல் இருவரிடமும் சமமான அத்வைதாத்ம ஸ்வரூபமென்கிற ஞானம் ஏற்படுமென்றும் அறிவிக்கப்படுகின்றது. சுபம்.

உபபத்திராதிபர்,

சுபம்.

# ஆத்மாநாத்ம விவேகம்.

दृश्यं सर्वमनात्मा स्यात् दृगेवात्मा विवेकिनः ।
आत्मानात्मविवेकोऽयं कथितो ग्रन्थकोटिभिः ॥

த்ருஶ்யம் ஸர்வமநாத்மா ஸ்யாத் த்ருகேவாத்மா விவேகிந: ।
ஆத்மாநாத்மவிவேகோऽயம் கதிதோ க்ரந்தகோடிபி: ॥

முன்னொரு ஸமயத்தில் இவ்வுலகமானது அக்ஞானக்கடலிலமிழ்ந்து விவேகம் குன்றி அவரவர்களுக்குறிய ஜாதி, மதம், தர்மம் இவைகளை முற்றிலும் விலக்கிவிட்டு விலங்கினங்கள் போல் தோன்றியவாறெல்லாம் நடத்தும் நாஸ்திகர்களால் பீடிக்கப்பட்டிருந்தது. அவ்வமயம் உலகிற்கேற்பட்டிருக்கும் இக்கொடிய கஷ்டத்தைப்போக்கவேண்டி பிரமன் முதலான தேவகணங்கள் கைலயங்கிரிக்குச் சென்று அங்கு விளங்கும் உமாகாந்தனுகிய ஸ்ரீ பரமேசுவரனை வேண்டினுர்கள். இவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கிய கருணைக்கடலான முக்கண்ணன் அவனியில் அவதரித்து தற்காலமிருக்கும் அக்ஞானத்தைப்போக்கி ஞானுர்க்கனை எங்கும் பிரகாசிக்கும்படி செய்கிறேனென்று அவர்களுக்கு வாக்களித்து அதை நிறைவேற்றவேண்டி ஸ்ரீசங்கரபகவத்பாதாசார்யாள் என்கிற திருநாமத்துடன் லோககுருவாகப் பிரகாசித்து ஆங்காங்கு ஸஞ்சாரம் செய்து மதத்தையும் தர்மங்களையும் நன்கு நிலைநாட்டிப் பிறகு பிற்காலத்திலுண்டாகும் ஜனங்களையும் அக்ஞானகூபத்திலிருந்தும் கரையேற்றி ஆத்மலாபத்தையடையும்படி செய்யவேணுமென்கிற இயற்கையிலுள்ள கருணையால் அந்த அந்த அதிகாரிக்குத்தகுந்தவாறு பலபிரகரணங்களையும் பாஷ்யங்களையும் இயற்றி அனுக்கிரகித்திருக்கிறுர்களென்பதையறியாதார் சிலரேயாவர்.

அவ்விதமியற்றப்பட்ட பல பிரகாணங்களுள் வேதாந்த சாஸ்திரப்பயிற்சி அதிகமில்லாதவர்களுக்கும் ஆத்மாநாத்மஞ்ஞானத்தை உண்டுபண்ணிஸம்ஸார துக்கத்திலிருந்தும் விலக்கவேண்டி வெளியிடப்பட்ட ஆத்மாநாத்மவிவேகம் என்கிற பிரகரண கிரந்தத்தின் சுருக்கமான பொருளை எளிய தமிழ் நடையில் முறையே பிரசுரிக்கவேண்டி அதன் மங்கள சுலோகம் முந்தி இங்கு வரையப்பட்டிருக்கின்றது.

உண்மையான ஆத்மஞ்ஞானத்தைப் பெற்ற விவேகிகளுக்கு உலகில் காணப்படும் ஸகல வஸ்துக்களும் அநாத்மாவாக ஆகின்றன. த்ருக் ஒன்றுதான் ஆத்மா. ஆத்மாவின் ஸ்வரூபம் இவ்விதமென்றும் அநாத்மாவின் ஸ்வரூபம் இவ்விதமென்றும் இவைகளை நன்குபகுத்தறிய வேண்டி பண்டிதர்களால் கோடிக்கணக்கான பல கிரந்தங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

சிஷ்—आत्मनः किं निमित्तं दुःखम् ஆத்மந: கிம் நிமித்தம் து:கம்
நித்ய சுத்த புத்த முக்தனான ஆன்மாவுக்கு எதினல் துக்கம் ஏற்படுகிறது?

குரு—शरीरपरिग्रहनिमित्तं ஶரீரபரிக்ரஹநிமித்தம் பாஞ்சபௌதிகமான இந்தச் சரீரத்தை அடைந்ததின் நிமித்தம்தான் துக்கமேற்படுகின்றது. இவ்விதமே ,,இங்கு சரீரத்தோடு இருப்பவனுக்குப் பிரியம் அப்பிரியம் இவைகளிலிருந்தும் விலகமுடியாதென்று சுருதியும் அறிவிக்கின்றது''

சிஷ்—शरीरपरिग्रहः केन भवति ஶரீரபரிக்ரஹ: கேந பவதி
ஆன்மாவுக்கு சரீரபரிக்கிரகமானது எதினல் உண்டாகிறது?

குரு—कर्मणा கர்மணா பூர்வகர்மாவினல்.

சிஷ்—कर्म केन भवति கர்ம கேந பவதி? கர்ம்மாவானது எதினல் உண்டாகிறது?

குரு— रागादिभ्यः ராகாதிப்ய: அநாத்மவஸ்துக்களிலேற்படும் ஆசைமுதலியவைகளால் உண்டாகின்றது.

சிஷ்—रागादयः कस्माद्भवन्ति ராகாதய: கஸ்மாத்பவந்தி ஆசைமுதலானவைகள் எதினல் உண்டாகின்றன?

குரு—अभिमानात् அபிமாநாத் ஸ்நேகத்தால் உண்டாகின்றன.

சிஷ்—अभिमानोऽपि कस्माद्भवति அபிமாநோபி கஸ்மாத்பவதி ஸ்நேகம் எதினாலுண்டாகின்றது?

குரு—अविवेकात् அவிவேகாத் அறிவின்மையாலேற்படுகின்றது.

சிஷ்—अविवेकः कस्माद्भवति அவிவேகꞏ கஸ்மாத்பவதி அறிவின்மை எதினாலேற்படுகின்றது?

குரு—अज्ञानात् அஜ்ஞாநாத் ஞானமில்லாதபடியால்.

சிஷ்—अज्ञानं केन भवति அஜ்ஞாநம் கேந பவதி அக்ஞானம் எதினால் உண்டாகின்றது?

குரு—न केनापि ந கேநாபி அதற்கு ஒரு காரணமும் இல்லை. அக்ஞானத்தை அனாதியாகவும் ஸத்தென்றாவது அஸத்தென்றாவது கூறவியலாததாகவும் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற இம்மூன்று குணஸ்வரூபமாகவும் ஞானத்திற்குச் சத்ருவாயும்பாவரூபமானயேதோ ஒருவஸ்துவென்றும்சொல்லுகிறார்கள் இதை அனுஸரித்தேநான் அக்ஞன் என்கிற அனுபவமுமிருக்கின்றது. இந்த மாயையானது "தேவாத்ம சக்தியைத் தன் குணங்களால் வியாபித்துக்கொண்டிருக்கிறது" என்று சுருதியும் கூறுகின்றது.

உபபத்திராதிபர்.

---

# ஸ்மிருதி செய்தவர்களின் ஆராய்ச்சி.

(௨௦௮-வது பக்கத்தொடர்ச்சி)

இனி இங்கு 18 சூத்திரங்களென்று பெயர்களைக் குறித்தார். இது போதாது கோபிலம், வாதூலம், ஸாங்கியாயனம், வாட்டியாயனம், சாண்டில்யம், முதலிய பல சூத்திரங்கள் அனுஷ்டானத்திலிருக்கின்றன. இவர் குறித்த பதினெட்டிலும் ஆகஸ்தியம் சாகல்யம், சாம்பவீயம், சௌனகீயம், மாதுன்யம், மாத்தியந்தினம், கௌண்டின்யம், கௌஷீதகம் இவையனுஷ்டிக்கப்படுவதில்லை. மேலும் மாத்யந்தினசாகைக்குக்காத்பாயன சூத்திரமென்று கூறுகின்றனர், ஆசுவலாயனருக்கு ஸாங்கியானமென்றதோர் சூத்திரமனுஷ்டானத்திலுண்டென்றும் பெரியோர்கூற்று.

2-53



ஆகவே மாத்தியந்தின சூத்திரம் எந்த சாகையைச் சார்ந்ததோ
தெரியவில்லை. இந்த வேதசாகையைச் சார்ந்தவர் இந்த சூத்தி
ரத்தைத் தான் அனுஷ்டிக்கவேண்டுமென்று வியவஸ்தை ஒருவ
ராலும் காட்டப்படவில்லை. வைத்தியநாத தீக்ஷிதர் ஸ்வசூத்திரப்ப
டியும்ஸ்வசாகைப்படியும் அனுஷ்டிக்கவேண்டுமென்கிறார். தீக்ஷிதர்
அபிப்பிராயப்படி முற்கூறப்பெற்ற 18சூத்திரங்களென்றால் கோபி
லம்வாதூலம் முதலிய சூத்திரானுஷ்டானக்காரர்களின் கதியாது?
இவ்விதமெல்லாம் சாஸ்திரங்களின் கதிபலவாறாயிருப்பதாலேயே
நமக்குசிஷ்டாசாரம் பிரமாணமென்றேகட்டாயப்படுத்தினர். இதி
ருக்கட்டும்கீழ்க்கூறப்பெற்ற சூத்திரங்கள் நம் தென்னாட்டில்போ
தாயனம் ஆபஸ்தம்பம் ஸத்யாஷாடம் திராஹ்யாயணம் ஆசுவ
லாயனம் ஜைமினீயம் காத்யாயனம் வைகானஸம் ஆக்னிவேசி
யம் பாரத்வாஜம் கௌஷீதகம் என்று பதினாறுசூத்திரங்கள் உள
இதில் ரிக்வேதிகளுக்கு ஆசுவலாயனமும் கௌஷீதகமும் சாமவே
திகளுக்குத்திராஹ்யாயணம் ஜைமினீயமும் வாஜஸனேயிகளுக்குக்
காத்யாயனமும் கிருஷ்ணயஜுர்வேதிகளுக்கு போதாயனம் ஆப
ஸ்தம்பம் சத்யாஷாடம் பாரத்வாஜம் வைகானஸம் ஆக்னிவேசி
யம் என்ற ஆறும் ஏற்பட்டன. இதை இவ்விதமறியாத சிலர்
கல்பசூத்திரக்காரர் 18 எனக் கணக்கிட்ட அக்னிவேசியரைக்
கணக்கில்சேர்க்காமல்ஸத்யாஷாடர் ஹிரண்யகேசியர்என்றுகூறிக்
கொண்டு 6 சூத்திரங்களென்கின்றனர். ஸத்யாஷாடருக்கே ஹி
ரண்யகேசியரெனப் பெயரென்பதை அறியாமைதான் அங்கு
காரணம்.

இனி இவ்வித கல்ப சூத்திரங்களை நாம் வேதத்திற்கடுத்தது
ஸ்மிருதியென்றோமேஸ்மிருதிக்கு அடுத்தப்பிரமாணம்உபஸ்மிருதி
என்றும் கூறினோம். உபஸ்மிருதிகளுக்கடுத்தாற்போல்கல்ப சூத்
திரங்களைக் கைக்கொள்வதா அல்லது எவ்விதம் இது பிரமாண
கோடியில் எடுத்துக்கொள்ளப்படுமென்று ஓர் சங்கை நிகழலாம்
அதற்கு ஸமாதானத்தை இங்கு அவசியம் தேடி மேற் செல்வாம்
இக்கல்பசூத்திரங்கள் உபஸ்மிருதிகளுக்கும் கீழாய்ப் பிரமாண
முள்ளவையல்ல. மற்றும் இவைகளை வேதங்களின் அங்கங்கள்
என்றே கூறுகின்றனர்.

हस्तौ कल्पान् प्रचक्षते ஹஸ்தௌ கல்பாந் ப்ரவக்ஷதே ।

வேதபுருஷனுக்கு கல்பஸூத்திரங்கள் கை என்று பலவிடங்களிலிருக்கின்றன. இதற்குக் காரணம் வேதியர் முதலிய மூவருணத்தவர்கட்கும் அத்யாவச்யகக் கிரியைகளை எடுத்துக்குறிக்கும் சிறந்த நூல்களாதலாலும், வேதமந்திரங்களை அப்படியே எடுத்து எழுந்தவையாதலாலும் வ்யவகாரம் முதலிய லௌகிக விஷயங்களைப்பற்றி ஸ்மிருதிகள்போல் எடுத்துக் கூறாததாலும் ஸ்ரௌதம, ஸ்மார்த்தம், தர்மம், பிராயச்சித்தம் முதலியவற்றைக் குறிக்கவே தோன்றியனவாதலாலும் வேதவிரோதமான வசனசம்மந்தமே இல்லாமையாலும் தந்திரம் முதலியவற்றைக் கூறாததாலும் பற்பல மதவேற்றுமைகளை எடுத்துக் கூறாமையாலும் சாகைகட்கேற்றவாறு வியவஸ்தை செய்யப்பட்டிருப்பதாலும், ஸ்மிருதி புராணம் இதிகாஸங்களிலும் தன் கிருஹ்யத்திற் கூறியவாறு என்று புகழ்ந்து கூறப்படுவதாலும்வேதாங்கமென்றோம். இவைகளையும் வேதமென்றே கூறிவிடலாமாயினும் பௌருஷேயம் என்ற தோஷத்தைக்கொண்டு அங்கமென்றோம். அதிலும் அரசனுக்கு அணிதேர் புரவி முதலியவைபோல் இவை வேதத்தின் அங்கமென்று கொள்ளாதிருக்கவே வியாகரணம் முகமெனவும் கல்பஸூத்திரம் கையென்றும் கூறிவிட்டனர். இதனால் கை முதலிய அவயவங்கள் புருடனை விட்டு எவ்விதம் வேறில்லையோ அதுபோல் வேதத்தைவிட்டு இது சற்றும் பேதமுள்ளதல்லவென்றாயிற்று. ஆனால் பாரதம் முதலியவற்றை வேதமென்கிறோமே. அதுவும் வேதம்போல் பிரமாணமுள்ளதாவென்றால் அதல்ல. அங்கு உபசாரமாய்த்துதிக்கவேற்பட்டதே தவிர வேறல்ல. இவ்விதம் கொள்ளாவிடில் ஸ்மிருதிகளுக்கும் மேலென்று அவைகளிலிருக்கும் கன்மாக்களை அனுஷ்டிக்கநேரிடும். அப்போது உலகம் நிலையற்றுவிடுமென்பது வெளிப்படையே. ஆகவே கல்பஸூத்தாங்களைவேதமென்றேகூறிவிடுவோம். ஆகவே ஸ்மிதிருகளுக்கும் முந்தியவை என்றே கொள்ளவேண்டும். ஆனால்—

मन्वादयः प्रयोक्तारो धर्मशास्त्रस्य कृत्स्नशः ।
तत्प्रयुक्तप्रयोक्तारो गृह्यकारास्तु मन्वतः ॥

𑌮𑌨𑍍𑌵𑌾𑌦𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑍋𑌕𑍍𑌤𑌾𑌰𑍋 𑌧𑌰𑍍𑌮𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌶𑌃 ।
𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌪𑍍𑌰𑌯𑍋𑌕𑍍𑌤𑌾𑌰𑍋 𑌗𑍃𑌹𑍍𑌯𑌕𑌾𑌰𑌾𑌸𑍍𑌤𑍁 𑌮𑌨𑍍𑌵𑌤𑌃 ॥

மன்வாதிகள் தர்மசாஸ்திரங்களை முற்றிலுமியற்றினர். அவர் குறித்த கன்மங்களுக்கு மந்திர பூர்வமாய் கல்பசூத்திரகாரர்கள் பிரயோகம் இயற்றினர் என்ற வசனப்படி தர்ம சாஸ்திரங்களுக்குப் பிறகு தான் இவை ஏற்பட்டனவென்று வெள்ளிடைமலை போல் தெள்ளியதாகிறதே எனில் இது குற்றமாகாது. சாஸ்திரார்த்தங்களை அறிந்த பெரியோர்கள் முன் உண்டானது பின் உண்டாவதென்ற அனுமானத்தைக் கைக்கொண்டு அதிருஷ்ட பலனை அளிக்கும்சாத்திரங்களை அலக்ஷியம் செய்துவிடமாட்டார்கள். ஆகவே சாஸ்திரார்த்தங்களையும் கன்மஸ்வரூபங்களையும் நம்மவர் மூததோரிடமிருந்து வணங்கிக்கேட்டும் பார்த்தும் அறிந்தே கன்மானுஷ்டானம் செய்து இம்மை மறுமைப்பலனை அடைவது வழக்கமென்பது இதன்மூலம் வெளியாயிற்று. இனி இதன் மேல் நமக்கு ஒரு தீர்மானம் ஏற்படலாம். அதாவது கன்மபலனால் ஸ்வர்க்காதி சுகம்கிடைக்குமென்றும் அக்கன்மங்களை இப்புவியில் அனுஷ்டித்துத்தான் தீரவேண்டுமென்றும் ஆகையால் எங்கிருந்தாலும்கன்மத்தினின்றும் வழுவாதிருக்கவேண்டுமென்றுமே தான். இவ்விதம் தீர்மானம் நமகேற்படுவது ஆஸ்திக்யத்திற்கு ஏதுவாயினும் இத்தீர்மானத்தை இப்படியே ஒப்புககொள்வதில் சற்று ஆஸ்திக்யம் குறையுமென்றும வரவர பரமநாஸ்திக்யமே முற்றுமென்றும் கருதி கன்மங்களை இப்புவியில் அனுஷ்டித்துத் தான் தீரவேண்டுமென்றவிடத்தில் ஸாமான்யமாய் பூமியென்று சொல்வதைதவிட சற்றுசுருக்கி ஓர்பிரதேசத்தைமட்டிலும் குறிப்பிடவேண்டுமென்று மகரிஷிகள் அபிப்பிராயப்படுகின்றனரென்பதை இனி விசாரிப்பாம்.

தர்மத்திற்குறிய தேசம்

यस्मिन्देशे मृगः कृष्णः तस्मिन्धर्मान्निबोधत ।

யஸ்மிந்தேஶே ம்ருக: க்ருஷ்ண: தஸ்மிந்தர்மாந்நிபோதத ।

எந்ததேசத்தில் கிருஷ்ணமிருகம் ஸஞ்சரிக்குமோ அங்கு தர்மத்தைச் செய்யுங்கள் என்று யாக்ஞவல்கியரும்

स्वभावाद्यत्र विचरेत् कृष्णसारस्सदा मृगः ।
धर्मदेशस्स विज्ञेयः द्विजानां कर्मसाधनम् ॥

ஸ்வபாவாத்யத்ர விசரேத் க்ருஷ்ணஸாரஸ்ஸதா ம்ருக: ।
தர்மதேஶஸ்ஸ விஜ்ஞேய: த்விஜாநாம் கர்மஸாதநம் ॥

கிருஷ்ணஸாரமென்ற மான் எந்ததேசத்தில் இயற்கையாய் எப்போதும் ஸஞ்சரிக்குமோ அது தர்மதேசமெனவறியத்தக்கது. த்விஜர்களின் கன்மத்திற்கு ஸாதனம் என்று ஸம்வர்த்தரும்:—

कृष्णसारैर्यवैर्दर्भैः चतुर्वर्णाश्रमैस्तथा ।
समृद्धो धर्मदेशस्स्यात् आश्रयेरन्विपश्चितः ॥

𑌕𑍃𑌷𑍍𑌣𑌸𑌾𑌰𑍈𑌰𑍍𑌯𑌵𑍈𑌰𑍍𑌦𑌰𑍍𑌭𑍈𑌃 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑍈𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌸𑌮𑍃𑌦𑍍𑌧𑍋 𑌧𑌰𑍍𑌮𑌦𑍇𑌶𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌆𑌶𑍍𑌰𑌯𑍇𑌰𑌨𑍍𑌵𑌿𑌪𑌶𑍍𑌚𑌿𑌤𑌃 ॥

கிருஷ்ணஸாரம் யவதானியம், தர்ப்பை நான்கு வர்ணாசிரமதர்மங்களும் எங்கு நிரைந்திருக்கிறதோ அது தர்மதேசமெனப்படும். அதைப் பெரியோர்களறியவேண்டும் என்று ஸ்மிருதி சந்திரிகாகாரரும்:—

सरस्वतीदृषद्वत्योर्देवनद्योर्यदन्तरम् ।
तं देवनिर्मितं देशं ब्रह्मावर्तं प्रचक्षते ॥

𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌦𑍃𑌷𑌦𑍍𑌵𑌤𑍍𑌯𑍋𑌰𑍍𑌦𑍇𑌵𑌨𑌦𑍍𑌯𑍋𑌰𑍍𑌯𑌦𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 ।
𑌤𑌂 𑌦𑍇𑌵𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌂 𑌦𑍇𑌶𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌵𑌰𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌚𑌕𑍍𑌷𑌤𑍇 ॥

ஸரஸ்வதி திருஷத்வதி என்ற தேவநதியின் மத்தியில் எந்த தேசமோ அதை தேவர் இயற்றிய தேசமென்றும் பிர்மாவர்தமென்றும்கூறுகின்றனர் என்று மனுவும் இம்மாதிரிப்பல மகரிஷிகளும் தர்மதேசத்தைக் குறிப்பிடுகின்றனர். இங்கு விசாரிக்க வேண்டியது இது. கிருஷ்ணஸாரமிருகம் கன்மத்திற்கு ஏதுவா என்று ஆசங்கிக்கலாம். ஆனால் இது சங்கையாகாவென்பதற்காகவே இந்த சுலோகத்தையும் மற்றைய சுலோகங்களையும் கூறினர். கிருஷ்ணஸாரமிருகமிருக்குமென்றதனால் ஸமமான சீதோஷ்ணம் உள்ளப் பிரதேசம் என்றும் அது தான் கன்மத்திற்கு யோக்கியமென்றுமாயிற்று. தர்ப்பம் உண்டாவதும் இத்தகைய நம்தேசத்திற்றான் இயற்கையாய் உத்பத்தி ஆகிறது. இவ்விரண்டும் இல்லாத தேசம் நமது கன்மத்திற்கு ஏதுவாகாததால் தான் அத்தேசத்திற்குநாம்போகவே கூடாதென்று தடுத்தார்கள். இதிருக்கட்டும் இனி இங்கு ஸரஸ்வதீ முதலிய நதிகளும் பாயுமிடமும் தேவதேமென்று விசேஷமாய்க் கூறியதால் நம் ஆர்யாவர்த்தத்தில் அப்பூமி புண்யவிசேஷம் உள்ளதென்று கொள்ள வேண்டும். இந்த